| நெல்லிக்காய் | ௳ | பலம் | தான்றிக்காய் | ௳ | பலம் |
| கடுக்காய் | ௳ | பலம் | இந்துப்பு | ௳ | பலம் |
| சிறுதேக்கு | ௳ | பலம் | கண்டங்திப்பிலி | ௳ | பலம் |
| சடாமாஞ்சி | ௳ | பலம் | | | |

இவைகளை கொண்டுவந்திடித்து சூரணித்து வஸ்திர காயஞ்செய்து வைத்துக்கொண்டு இஞ்சி சுரசத்திலாவது தேனிலாவது திருகடிப்பிரமாணம் போட்டு குழைத்து சாப்பிடவும் இப்படி அந்திசந்தி ரெண்டு வேளையாக கரு-நாள சாப்பிடவும்,

### தீரும்வியாதி,

குத்திருத்திக்கொண்டிறைக்கும் யிருமல் வயா உப்பிஷம் இவை நீங்கும் பத்தியம்,

கரி சூப்பு கிளுவை உளுவை குரவை கத்திரி முருங்கை அவரை இதுகளின் பிஞ்சு நெய் கூட்டி சாப்பிடவும் அதிக தீபனமும் உண்டாகும்.

---

### யீளையிருமல் சுவாசத்திற்கு கிருதம்,

தூதுவேளைப்பழரசம் துட்டிடை
ஆவின்நெய் துட்டிடை

நற்சீரகம் விராகனிடை-க கருஞ்சீரகம் விராகனிடை க
சுக்கு விராகனிடை க திப்பிலி விராகனிடை க
மிளகு விராகனிடை க

இவைகளையெல்லாம் நன்றாய்ப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து மேற்படி பால நெய் பழரசமிதுகளுடன் குழைத்து சாப்பிட தீரும்,

பிள்ளைகட்குவரும் சுரத்திற்கும் குளிருக்கும் மருந்து,

மூசிபாஷாணத்தகலம்வேரை வெள்ளீரவிட்டரைத்து கொஞ்சம் சக்கரையிட்டு பிசைந்து கொடுக்கநீங்கும்,

அஜீரணத்திற்கு குழம்பு,

வெள்ளைக்காக்கணம்வேர் மிளகு இரண்டும் வெந்நீர்விட்டரைத்து தேனில் மத்தித்து உண்ண அஜீரணம் வெகு சீக்கிரம நீங்கும்.

---

மொலாம்.

லிங்கம் ை பலம் பூரம் வ பலம்
முதார்சிங்கு வ பலம்

இந்த மூன்றுதினுசை மைபோலரைத்து படிகாரம் காலிக்காபலம் சட்டநெருப்பில்வைத்து பொங்கின பிறகு சூரணத்துடன்வைத்து நாலுமையு மைபோலரைத்து பசும்வெண்ணை ஒருபலம்போட்டு நெகிழ அரைத்து ஒருபரணியில் வழித்துக்கொள்ளவும் கடுக்காகாசிசட்டி தினுசு ஒன்றுக்கு கால்பலம் கொண்டிடித்து ஒருபாத்திரத்தில் ஒருபடி தண்ணீர்விட்டு யிந்த தூளை கொட்டி காச்சி அரைபடிசலமதுக்குயிறக்கி இந்தமுலாமை போடவும் ஆராதரணம் ஆறும,

---

தந்தவியாதிக்குப்பொடி

எருக்கம்பழுப்பு ௩ம-கொண்டுவந்து அம்மியை சுத்திசெய்துவிட்டு பழுப்பை அம்மியில்வைத்து கட்டியாய் நெகிழ அரைத்து உண்டைசெய்து வெள்ளைமல்துண்டால இரண்டு மூன்று புரைசுத்தி சாணியை கட்டியாகபிசைந்து துணிதெரியாமல்பூசி வெய்யலில் காயவைக்கவும் காய்ந்தபிறகு காடைபுடம்போட்டு

தணிந்தபிறகு தணியைபிரித்தெறிந்துவிட்டு ஓருடார்த்திரத்திலெருக்கம்பாலைக்கொண்டுவந்து அம்மியில் சூரணத்தைவைத்து பாலைவிட்டு நெகிழவரைத்து பில்லைதட்டி வெய்யலில் காயவைத்து பானைவோட்டை இரண்டு பில்லை நரிக்கி ஒரு பில்லையின்பேரில மருந்தைவைத்து மற்றொருபில்லை மேல்மூடி மூன்று வராட்டியில் புடமபோடவும் போட்ட சூரணத்தை ஒரு டப்பியிலவைக்கவும்,

முடக்கத்தான்வேர் ரு பலம் கடுக்காத்தோல் ரு கரிவேலம்பட்டை ரு பலம் மயில்துத்தம் உ ,

இதுகளை கட்டியாய் மைபோலரைத்து லேசாக பில்லைபோல்தட்டி வெய்யலில காயவைத்து ஒரு வராட்டியில் சுட்டு எருக்கம்பழுப்பு சூரணத்துடன் சேர்த்து காலைமாலை பலதேய்க்கவும் தீரும்வியாதி.

பலநோய் பல்லில் ரெத்தம்வருதல் பல்லில் புழு விழுதல் பல் சொத்தைவிழாமை தந்தவியாதிகளுக்கு சஞ்சீவியென்றறியவும்.

---

மகோதரசாந்திக்கு சாறு.

பேய்பீர்க்கின்காய பச்சையாய் கொண்டுவந்திடித்துப் பிழிந்தசாறு உழக்கு பெருங்காயம் கடுகு உலர்ந்த இஞ்சிதூள் இவை வகைக்கி க-களஞ்சிபோட்டு மூன்றுநாளுண்ண சவுக்கியத்தைக் கொடுக்கும் வியாதி பலக்காது.

---

கிரந்தி சூலை புண் வயற்றுவலி வாய்வு இதுகட்கு பெரும்பாடுதீர நெய்,

நாவலபட்டை ரு பலம் ஓதியம்பட்டை ரு பலம் இரண்டுங்கொண்டிடித்து தக்கின நீர்விட்டு கியாழம்

ட்டு அதிமதுரத்திற்கு பசும்பால்விட்டரைத்து அதி ற்கரைத்து காய்ச்சி வடிகட்டி காலைமாலை யுண்டுவர ஸ்திரீகளின பெரும்பாடு மிக்கசாந்தியாம்.

### நீர்கழிச்சலுக்கு கட்டுவாறு.

வெள்ளை குண்டுமணிபருப்பு உ-பலம்
புளியங்கொட்டைதோல் உ-பலம்

இவை ரெண்டையுங்கொண்டுவந்து பொடியாக மை போலரைத்தெடுத்து ஒருகளஞ்சி எருமைவெண்ணை யில் கெச்சக்காய்பிரமாணம் மேற்படி மருந்தைப் போட்டு பிசைந்து சாப்பிட நீரொழுக்கு சாந்தியா கும்.

---

### காதிறைச்சலுக்கு தைலம்.

எருக்கன்யிலைசார் ரெண்டரைபலம்
,, என்ணெண்ணை ரெண்டரைபலம்
ஒன்றுபடித்தி அடுப்பிலிட்டு

| | | | |
|---|---|---|---|
| உள்ளி ரெண்டரை விராகன் | | கோஷ்டம் ரெண்டரை | |
| வசம்பு | ,, | திப்பிலி | ,, |
| சுக்கு | ,, | இந்துப்பு | ,, |
| கோரைக்கிழங்கு | ,, | | |

இவையெல்லா மிடித்துபபோட்டு காய்ச்சி வைத்துக் கொண்டு உ-துளிவிட்டால் காதிரைச்சல் தீரும்.

---

### பெரும்பாட்டுக்கு

முக்காவேளைவேரின் பட்டையைக் கொண்டுவ ந்து அரைத்து மூன்று கெச்சக்காய் பிரமாணமெடுத் து பச்சரிசி கழுநீரில் கலக்கி சாப்பிடவும் இப்படி ௯-று-நாள் சாப்பிடவும்.

ஓடு குன்மத்திற்கு பொடி.

குப்பைமேனி சமூலம் ௫-பலம்
செருப்படைகையான் ௫-பலம்
தகரை ௫-பலம்

இவை மூன்றும் நிழலிலுலர்த்தி பொடித்துவைத்துக் கொண்டு திருகடிப்பிரமாணம் தேனில குழைத்துத் தினவும் இப்படி அந்திசந்தி ௨ம-நாள் ௪ம-நாள் சாப்பிடவும் வாய்வுபண்டங்களாகாதென்றறிக,

---

நீர்கடுப்பிற்குமருந்து,

கோரைக்கிழங்கு ஆவாரம்விரை
தேத்தான்வித்து புளியங்கொட்டைதோல்

இவையெல்லா இனாகாவிட்டரைத்து ராத்திரியில் பனியில்வைத்து காலையிலெடுத்து சாப்பிடவும இப்படி ௩-நாள் கொள்ளத தீரும்.

பிள்ளை பெற்றவர்களுக்கு வயற்றில்தங்கிய அழுக்குநீங்கமருந்து.

சுக்கு ௨ பலம் வெள்ளைவெங்காயம் ௨ பலம்
மிளகு ௨ பலம் சித்திரமூலை ௨ பலம்

இவைகளை யெல்லாமிடித்து நாலிலொன்றாய் கியாழமிட்டிறக்கி சாப்பிடவும் இப்படி ௩-நாள் கொள்ளவும்,

---

கரப்பான் ரிணங்களுக்கு எண்ணெய்

செங்கத்தாரிப்பட்டை ஒருபிடி.
சிறுகுறிஞ்சான்வேர் ஒருபிடி.
சிறுசின்னியிலை ஒருபிடி.

மிளகு ௨ பலம் விளக்கெண்ணெ ௮ பலம் எண்ணெவிட்டே இலைகளையரைத்து எண்ணெயில கரைத்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்க்காயச்சிசிறு கரண்டிவிதம் ௰-௬-நாள கொடுக்கவும் கடும்பத்தியம் தாய் காக்கவும்,

### வாய்வு கிராணிதீர நத்தைசெண்ணெ.

நத்தைச்சதை ௨-பலம் சுக்கு மிளகு திப்பிலி ஓமம் சீரகம காயம் கடுகுரோணி இந்துப்பு இவை வகைக்கு ௨ ௦-விராகனிடை முருங்கை திருபலை கியாழத்திலரைத்து க௨-பலம் எண்ணெயில் கரைத்து மேற்படி நத்தைசதையைபோட்டு மெழுகுபதமாய்க் காயச்சி யிரக்கி சிறுகரண்டிவிதம் ௰௫-நாள் சாப்பிடவும்.

### கரப்பான்வியாதிக்கும் சிரங்கிற்கும் உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெ

கருநொச்சியிலே பிடி ௧ சாரணைக்கி பிடி ௧
சிறுகுறிஞ்சான் பிடி ௧ சிவகரந்தையிலே ,, ௧
சின்னியிலே பிடி ௧

விளக்கெண்ணெ ௫-பலத்தில் இவையாவும் அரைத்து கரைத்து,

வசம்பு அரைபலம் பூண்டு அரைபலம்
கடுகுரோணி அரைபலம்

பொடித்துப்போட்டு காய்ச்சி யிரக்கும்போது ரசகற்பூரம் ௨-விராகனிடை எண்ணெவிட்டரைத்து கலக்கி யிரக்கவும் உள்ளுக்கு கரண்டிவிதம் கொடுத்து மேலுக்கும் பூசிவர எவ்வித சிரங்கும் ஆறிவிடும்.

## சகலரோகத்திறகும் எண்ணெ

பெருமிலேசார் ௨ படி வல்லாரியிலேசார் அரைபடி
வெகுகாயச்சார் ௨ படி கததாமைரமடல்சார் அரைபடி
ஆகாஷத்தாமரைசார் அரைபடி

வகைக்கு அரைபடிசார்பிழிந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும் ஒருயேனத்தை அடுப்பிலவை தது இந்தசாருகளையூத்தி அரை வீசை விளககெண் ணெயை சாறறுடன ஊத்தி கிளறிக்கொண்டேயிருக் கவும் எண்ணெ பதமாயவரும்பொழுது யிரக்கவும் உளளுக்கு உ-பலம் எண்ணெ சாப்பிடவும் பத்தியம் இச்சாபததியம சகலவியாதியும்போகும.

---

## பேதிக்கியெண்ணெ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாகு | க | பலம | சிததிரத்தை | க | பலம |
| பாகரு | க | பலம | மிளகு | க | பலம் |
| கடுகுரோகணி அரைபலம் | | | கடுக்கா | உ | பலம் |
| யிரா...ப அரைபலம் | | | | | |

இவைகளையெல்லாம் தூள்செய்து கியாழஞ்செய்து யி.... தது வடிகட்டி சித்தாமணககெண்ணெ க பலமவிட் சாப்பிடவும யிச்சாபததியம்.

## தீரும்வியாதி.

சுரத்துக்கு பித்தசாந்தி யிடுப்பு வாய்வுநீங்கும்,

## குளிர்ச்சியெண்ணெ.

| | | | |
|---|---|---|---|
| எளனீர் | உ | எலுமிச்சம்பழம் | ௰ |
| வாலமிளகு வ பலம் | | ஏலரிசி | வ பலம |

பனங்கற்கண்டு அ பலம் விளக்கெண்ணெ அரைவீ சையைபாத்திரத்தை அடுப்பில்வைத்து எளநீர்சாற்றை விட்டு எலுமிச்சம்பழ ரசத்தை விட்டு வால்மிள

கு ஏலரிசி ரெண்டையும் பொடித்துப்போட்டு பனங் கற்கண்டை கொட்டி எண்ணெயையூத்தி கிளரி பதத்தில யிரக்கவும் க-பலம் எண்ணெ சாப்பிடவும் இச்சா பத்தியம் தீரும்வியாதி,

நீர்சுருக்கு ரத்தக்கடுப்பு பித்தசாந்தி உயிர்நிலை புண்பெரும்போக்கு வயத்துவலி இவைகள் தீரும்,

ராட்சதசூரணம்,

இந்துப்பு பொட்டிலுப்பு கல்லுப்பு கரியுப்பு வெடியுப்பு வகைக்கு விராகனிடை ௨ ௰

வாய்விளங்கம் க பலம் கருஞ்சீரகம் அரைபலம்
ஓமம் அரைபலம்

இவையெல்லாமிடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து நிருத்து அவ்விடைச் சமயிடை இண்டமபட்டை சூரணம்சோதத்துவைத்துக்கொண்டு காலையில திருகடி சூரணமெடுத்து தேன் நெய் இதுகளை ரெண்டுங்கலந்து குழைத்து சாப்பிடவும் பத்தியம் செய்கைத்தண்டு துவரை நெத்திலி சுரா இவைகளாகும், வாதசநிசூல்வாத குத்தல குடைச்சல்தீர சூரணம்

இலைக்கள்ளி வேர் பட்டையை உலர்த்திபிடித்து சூரணம்செய்து வைத்துக்கொண்டு பிரதிதினம காலையில் துட்டிடை பொடியெடுத்து தேன்விட்டு குழைத்து சாப்பிட வாய்வு யாவும் தீருவதுடன் எலி முதலான சில விஷங்கள்தீரும் இச்சாபத்தியம்,

பெரும்விக்கலுக்குமருந்து,

எட்டுவிராகனிடை திப்பிலி
பத்துவிராகனிடை சீரகம்

இரண்டும் சூரணித்து தேனிற்குழைத்துதின்ன உடனேமாறும்,

## சொறிசிரங்கிற்கு பூச்சுமெண்ணெய்.

ஜாதிலிங்கம் ௩ பலம் வெள்ளருகு ௩ பலம் இவ்விரண்டும் சூரணித்து ௪-பலம் சூரணத்திற்கு ௫-பலம் எண்ணெய்கலந்து காய்ச்சி கரண்டியில் வைத்தும் சாப்பிட்டுவர சிரங்கு சொறிதீரும்

---

## அரையாப்புதீர எண்ணெய்.

கொடிவேலிவேர் விராகனிடை-உ௰
வித்து விராகனிடை உ௰ வசம்பு விராகனிடை-உ௰
காயம் ,, இரண்டரை உள்ளி ,, ரெண்டரை
சுக்கு ,, இரண்டரை

இவைகளை சூரணித்து ௫-பலம் எண்ணெயில் கலந்து காய்ச்சி குடிக்கையாக உண்டுவரில் அரையாப்பு சூலை கிரந்திதீரும்

---

## பெருமூத்திர பசுமோர்.

தேற்றான்விரை ௳ பலம் ஆவாரைவிரை ௳ பலம்
வெள்ளரிவிரை ௳ பலம் கடுக்காய் ௳ பலம்

இந்த நான்கையும் போட்டிடித்து பசுமோரிற்கலந்து சாப்பிட மூத்திரப்பெருக்கு நீங்கும் இப்படி ௩-நாள் கொள்ளவும்.

---

## பல்வலிதீரக் கியாழம்

மருக்காரை ௫ பலம் சுக்கு ௫ பலம்
மருதம்பட்டை ௫ பலம் வெள்வேலம்பட்டை ௫ ,,
எருக்கின்சமூலம் ௫ ,, ஆவாரம்பட்டை ௫ ,,

இவையெல்லாமிடித்து கியாழமிட்டு குருக்காய்ச்சி யிறக்கி வாய் பொருக்கும் சூட்டுபதத்தில் கொப்பளிக்கவும் ௫-௬-வேளை கொப்பளிக்கவும் பல்வலிதீரும்,

௫

### பித்தம் ௬௰-தீர தலைமுழுகும் தைலம்.

நல்லெண்ணெய் அரைபடி நெல்லிச்சாறு உழக்கு பசும்பால் உழக்கு முசுமுசுக்கைச்சாறு உழக் கீந்திலசாறு உழக்கு பொன்னாங்கணிச்சாறு உழ இவையெல்லாமசேர்த்து எண்ணெயிறகலந்து முத்த ககாசு அதிமதுரம் ஏலம் சடாமாஞ்சி செண்பகம இராம்பு சந்தனத்தூள் வகைக்கி விராகனிடை-உ பொடித்துப்போட்டு காய்ச்சி தலைமுழுகிவர பித்தம் நாற்பதுந்தீரும்.

---

### மேற்படி பித்தத்திற்கு சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாதுரம் | உ | பலம் | கோஷ்டம் | உ | பலம் |
| ஏலம் | உ | பலம | சடாமாஞ்சில்உ | | பலம் |
| சந்தணம் | உ | பலம் | இராம்பு | உ | பலம |
| தாளிசப்பத் | உ | பலம் | சீரகம் | உ | பலம் |
| சுக்கு | உ | பலம் | திப்பிலி | உ | பலம் |
| கோரைகிழஉ | | பலம் | நெல்லிமுள்ளிஉ | | ப-ம |

இவைகளையெல்லாமிடித்து வஸ்திரகாயஞ்செய்து அவவிடைக்கு சமன் வெண்சக்கரைக்கலந்து சீசாவில வைத்துக்கொண்டு காலை மாலை திருகடிப்பிரமாணம் ௬௰-நாள்கொள்ளவும்.

---

### மூலநோய்யாவுந்தீரசூரணம்

வாழைக்குருத்தின் உலர்ந்த-உவ பலம்
காட்டுக்கருணை உவ பலம் கரிக்கருணை உவ பலம்
புளிக்கருணை உவ பலம் காராக்கருணை உவ பலம்
சித்துளாமூலம்உவ பலம் மருட்கிழங்கு உவ பலம்
புளியாரை உவ பலம்

## வயித்திய அரிச்சுவடி.

இவையெல்லாம் சூரணித்து எருமைப்பாலில் பிட்டவிட்டு வெடுத்து அவ்விடையிற்பாதி சக்கரைகலந்து வைத்துக்கொண்டு சம-நாள் காலை மாலையும் திருகடிப்பிரமாணம் சாப்பிடவும்.

---

### கண்டத்திற்குமேற்பட்டவியாதிக்கெல்லாம்
### சூரணம்.

| | | | |
|---|---|---|---|
| கண்டங்கத்திரி | க பலம் | பெருமருந்து | க பலம் |
| சுக்கு | க பலம் | செங்கத்தாரி | க பலம் |
| இருசீரகம் | க பலம் | திருகடுகு | க பலம் |
| கற்சங்கம் | க பலம் | அரத்தை | க பலம் |
| விளங்கம் | க பலம் | பரிங்கி | க பலம் |

இவைகளையெல்லாம் சூரணித்து அந்திசந்தி திருகடி கொண்டு இச்சாபத்தியமிருக்கவும்

### வாதம் அம-க்கும் சூரணம்

| | | |
|---|---|---|
| சித்திரமூலம் | மாவிலிங்கம் | சரக்கொன்றை |
| முருங்கை | சங்கு | வெள்ளருகு |
| மலைவேம்பு | எருக்கன்பழுப்பு | சுக்கு |
| திப்பிலி | பேரீச்சங்காய் | பஞ்சலவணம் |
| பரங்கிச்சக்கை | | |

இவைகளெல்லாம் வகைக்கு உ-பலமாக கொண்டிடித்து காசிலொருபங்கு சக்கரைகலந்து அந்திசந்தி திருகடி சாப்பிடவும். 45888

---

### கவிசைபெருவயறுதீர பேய்துமட்டி
### எண்ணெய்

| | |
|---|---|
| பேய்துமட்டிக்காய் | வெள்ளைகாக்கணம்வேர் |
| மாவிலிங்கம்பட்டை | கொ... கொழுந்து |
| காயம் | க... கம்வித்து |
| அவுரி | சின்னி ... கொத்தான் |

கழற்பிவித்து மேலிப்பருத்தி வசம்பு
மஞ்சள் சிகதிரைமூலம பிரண்டை
இவைகளெல்லாம் வகைக்கு அரிக்காலபலம்
இந்துப்பு பொட்டிலுப்பு வெளயலுப்பு
கரியுப்பு கல்லுப்பு வெண்காரம
சவுக்காரம் சீனகாரம படிகாரம் நவாச்சாரம்

இவைகளெல்லாம் வகைக்கு விராகனிடை-உ இவை யாவும் பொடித்து சூரணித்து ௩-பலம் விளக்கெண்ணெயில் கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய்க்காய்ச்சி வடித்து பிரதிதினம் காலையில் துட்டிடை கொள்ளவும பத்தியம் யிளகசி சூப்பு மான்கரி அரைக்கீரை சிறுகீரை தூத்திக்கீரை கத்திரிப்பிஞ்சு முருங்கைப்பிஞ்சு அவரை துவரை நெய் பால் இவைகளாகும் ௩-௰-நாள எண்ணெசாப்பிட்டு அதற்கு சரிநாள்சென்று தலைமுழுகவும் நாற்பதுநாள்வரையிலும் இச்சாபத்தியமாகயிருப்பதுடன் புளை நடை ஸ்ரீபோகம் லாகிரி இவைகள் கூடாதென்றறிக,

---

## இரத்தமேகந்தீர தாளிச்சசூரணம்

தாளிசப்பத்திரி ௪-கழஞ்சி திருகடுகு உ-கழஞ்சி
ஏலம ௩ கழஞ்சி லவங்கம் ௩-கழஞ்சி

இதுகளெல்லாம் கல்லுரலிட்டு யிடித்து வஸ்திரகாயஞ்செய்து ௧உ-கழஞ்சி சக்கரைகூட்டி காலை மாலை சாப்பிட்டுவர மேற்படி வியாதிதீரும் இச்சாபத்தியமிருக்கவும்

### கண்ணோய் கூடக்கும் தலைமுழுக தயிலம்

பொன்னாங்கண்ணி எலுமிச்சம்பழம் மூத்தக்காசு
சீந்தில்தண்டு சிறுகீரை செண்பகப்பூ
பூநாகம் மதுரம் ஏலம்
கோஷ்டம் செங்கழுநீர்பூ தும்பைப்பூ

இதுகள் வகைக்கு க-பலம் சேகரித்துப்போட்டிடிக துவெண்மிளகு ரெண்டரைபலம் சூரணித்துப்போட்டு பத்துபலம் நல்லெண்ணெயிலிட்டுக்காய்ச்சி சீசாவிலடக்கி மார்க்கடைத்து குப்பைமேட்டில சங-நாள புதைத்துவைத்தெடுத்து நாலுநாள் வட்டமாகமுழுகிவரில் கண்ணோய் யாவும் நீகுவதன்றி யெப்பொழுதும் அணுகாது,

---

## கண்டமாலைக்கு மேற்பூசுந்தயிலம்

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய் | உள்ளி | வெம்பாடம்பட்டை |
| நறுகிரநதி | கெந்தி | சூதம் |
| துருசு | துத்தம் | குங்கிலியம் |
| தாரம் | முதார்சிங்கு. | |

இவைகள வகைக்கு க-விராகனிடை எடுத்து மேற்படி எண்ணெய்விட்டேயரைத்துகரைத்து சூரியபுடம்வைத்தெடுத்து கோழியிறகினால் தடவிக்கொண்டுவரவும் தீரும் அன்றியும் எவவிதசிரங்கிற்கும்தடவலாம்

---

## சிலவிஷங்கட்கு குடிநீர்

| | | |
|---|---|---|
| தூதுவேளை | நாரத்தை | நொச்சியிலை |
| சின்னி | சிறுசின்னி | மலைநன்னாரி |
| பிரமி கழற்சி | கடுக்காய் | சுக்கு |

இவையெல்லாம் போட்டிடித்து கியாழமிட்டு இருவேளையும் மூனறுநாளுண்ண சிலவிஷங்கள் தீரும் கடும்பத்தியம்.

## கணைத்தென்னை,

| | |
|---|---|
| மருள்கிழங்கு | உள்ளி |

இவைகளையெல்லாம் வகைக்கு க-பலமாக எலுமிச்சம்பழம் சார்விட்டரைத்து பின்னக்காயளவுக்கு உழுந்

கெண்ணெவார்த்து காய்ச்சி கரண்டிவிதம் கொடுக்க வும் மேதெங்காய் மாங்காய் மாவினால்செய்தபண்டங்கள் வாயவுமுதலானதாகாது,

கணத்திற்கு சூரியபுடமெண்ணெய்

மாஞசில் முத்தம் சீந்தில சிறுகாஞ்சொரி இவைகளெல்லாம் வகைக்கு ரெண்டரைபலம் சூர ணித்து சூரணத்திற்கு ஏழரைபலம் விளக்கெண்ணே யில்கலந்து கூ-நாள் சூரியபுடம்வைத்து பிரகெடுத்து சிறுகரண்டிவிதம் ரு நாள் கொடுக்கவும் பத்தியம்மே ற்கண்டபடி இச்சாபத்தியமிருக்கவும்,

கைகாலில் பித்தவெடிகண்டால்மருநது

மருதம்பிலேயை ஒருபிடிகொண்டுவந்து பசும்பால்வி ட்டரைத்து பின்னக்காயளவெடுத்து காலபடிபசும்பா லில் கரைத்து போசனம்செய்தபிறகு சாப்பிடவும் ரு-ரு-நாள் சாப்பிட சுவஸ்தயபடும்,

நீரில் இரத்தம்கண்டால் மருந்து,

பச்சரிசி விராலிபிலே இரண்டும் சமன்கொண்டு எருமைப்பால்விட்டரைத்து பின்னக்காயளவெடுத்து தேத்ரான்வித்து சூரணம் கழற்சிக்காயளவு கலந்து பிசைந்து இருவேளையும் கூ-நாள்சாப்பிடவும்,

முழங்கால்வாதத்திற்கு கட்டடம்,

விழிதியிலே, என்னுபுண்ணுக்கு ஆவாரையிலே ச மன்கொண்டு கொஞ்சம் வெள்ளுள்ளிகலந்துயிடித்து விளக்கெண்ணெயில்வதைக்கி கட்டவும் இப்படி கூ- நாள பகலில் ஒருகட்டு ராவில் ஒருகட்டு கட்டவுந் தீரும்,

சளிகோழைக்கு பிரண்டைரசம்,

பிரண்டையை கொண்டுவந்து கும்பிசாம்பலில் வதக்கி சாறுபிழிந்து துட்டிடை சாறு உள்ளங்கை யில்வார்த்து ஒருசிட்டிக்கை வெள்ளைசர்க்கரைபோட்டு சாப்பிடவும இப்படி இருவேளையும் க-நாளுண்ண தீரும்,

பிள்ளைபெற்றவர்களுக்கு சீழுதிரம்கட்டினால் மருந்து,

வாழைமரத்தின் குருத்தை கொண்டுவந்து சுட்சாம்பலாக்கி பனைவெட்டு சமன்போட்டுபிசைந்து பாக்களவாக இருவேளையும்சாப்பிட க-ச-விசைவல முங்கழியும் வியாதியும்தீரும்,

சுகஜன்னிக்குநெய்

முதலைநெய் அரைபலங்கொண்டுவந்து இரும்புக்கரண்டியிலிட்டு உருக்கி சுடுகையாகத்தானே உச்சியில்விட சுகஜன்னி பிதற்றல்பிணத்தல் விகாரம் இவைவிட்டோடும்,

குட்டினாலகண்ட வெள்ளைக்குமருந்து

ஒனறேகால கழஞ்சியிடை வெண்காரத்தை செருப்பிலிட்டுபொரித்துக்கொண்டு பசும்வெண்ணெயில கலந்துண்ணவும் க-நாள் இருபோதும் சாப்பிட நீஙகும்,

சிறுநீர்யிறங்க மருந்து

மூடக்கொத்தான்யிலை க-பலம் வெள்ளைப்பூண்டு அரைபலம் இரண்டும்அரைத்து காலையிலசாப்பிடவும் இப்படி க-நாள் கொள்ள தாராளமாய் நீர்யிறங்கும்,

மேகபுண்புரைகள் முதலான ரிணங்களுக்குத்தைலம், சங்கம்வேர் ரு பலம் பூவரசம்பட்டை ரு பலம் சிவனார்வேம்பு ரு பலம் வாலுளுவையரிசி ரு பலம் இவையெல்லாம கல்லுரலிலிட்டுயிடித்து தகுந்த நீர் விட்டு பிசைந்து குழித்தயிலமிறக்கி க-பலம் தயில த்திறகு க விராகனிடை முதார்சிங்கியிழைத்து உள் ளுக்குங்கொடுத்து மேலுக்குமபூச சகல மேக புண்க ளும் ஆறும் யிச்சாபத்தியம்.

---

எச்சல்தழும்பு படர்தாமரைபடைகட்கு பூசுமருந்து,

பூவரசம்பட்டையை எலுமிச்சம்பழரசத்தினால் அரைத்து தடவினால் கொப்பளித்து விஷநீர்வடிந்து மாறிவிடும்.

தலைவலிக்கு சுருக்குதயிலம்,

எட்டிக்கொழுந்து இரண்டுபிடி மிளகு அரைப பலம் அத்துடன் தட்டிப்போட்டு நல்லெண்ணை காலப டியில்கலந்து காய்ச்சிவைத்துக்கொண்டு ௩-நாள் வ ட்டமாகமுழுகிவரில் நெடுநாளாயுள்ள தலைவலி நா ளாவட்டத்தில் சுவஸ்தமாகும் தலைமுழுகும் தினத் தில பகலில நித்திரைசெய்யாதிருக்கவும் இச்சாபத் தியம்.

---

நாக்கிலும் உதட்டிலும் உண்டாகும் புண்களுக்கு குளிர்ந்தயெண்ணை

பசும்பால் அரைபடி சித்தாமணக்கெண்ணை அரைபடி இரண்டும்கலந்து அடுப்பிலேற்றி வெந்தியம்வெ ங்காயம மயிர்மாணிக்கமூலிகை வகைக்கு நாலுபலம் அரைத்துப்போட்டு காய்ச்சிவடித்துவைத்துக்கொண் டு காலையில கரண்டிவிதம் சாப்பிட்டுவர மூலச்சூடுதெ ணிந்து புண்கள் ஆறும்.

மேகம் சகலபிணிசம கபாலக்குத்து மேககாங்கை
இவைகட்கு தைலம்

| | | | |
|---|---|---|---|
| காகதொட்டிசாறு | வ படி | மூசுமூசுக்கைச்சாறு | வ ,, |
| கரிசலான்பூண்டு | வ படி | நொச்சி | வ ,, |
| சிறுகாஞ்சோரி | வ படி | கருவூமத்தை | வ ,, |
| கஞ்சாயிலைசார் | வ படி | எருக்கம்பழுப்பு | வ ,, |
| இஞ்சிச்சாறு | வ படி | | |

நலலெண்ணை காலேவீசம் வெள்ளாட்டுப்பால் காலேவீ

இவையெல்லாம் ஒன்றாய்கலந்து பத்துநாள் சூரியபுடமவைத்து பதினோராநாள் திருகடுகு கோஷ்டம் அக்கிராகாரம் கருஞ்சீரகம ஓமம் குருசாணியோமம் சாம்பிராணி பூலாங்கிழங்கு வகைக்கு விராகனிடை - க வெள்ளாட்டுபபாலிலரைத்து கலந்து காய்ச்சிவடித்து முழுகிவரில மேகம் உதரம் சகலபிணிசம் கபாலக்குத்துசயம் மேககாங்கை இவைகள் நீங்கும் கட்டபுளி வருத்தவுப்பு கூட்டவும்,

பிணிசததயிலம்,

கெஞ்சாயிலைச்சாறு அரைபடி நலலெண்ணை அரைபடி இவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து அதனுடன் மிளகு ஒன்னரைப்பலம் அரைத்துப்போட்டுகாய்ச்சிவடித்து முழுகிவர சகல பிணிசம் நீங்கும்.

பித்தவெட்டை அஸ்திசுரம் கைகால்காந்தல்
இவைகட்கு பசும்பாலதைலம்,

| | | | |
|---|---|---|---|
| பசும்பால் | க-படி | நெல்லிச்சாறு | வ-படி |
| பொன்னாங்கணிசாறு | வ-படி | கத்திரிவேர்ப்பட்டை | வ-படி |
| செவ்விளநீர் | வ-படி | சிறுகீரைச்சாறு | வ-படி |

நலலெண்ணெ ஒன்னரைப்படி எல்லாமொன்றாய்கலந்து,

மதூரம உ விராகனிடை கோஷ்டம் உ விராகனிடை
ஏலம உ விராகனிடை குரோசாணி உ விராகனிடை
பூலாங்கிழங்கு உ ,, கஸ்தூரிமஞ்சள உ ,,
சடாமாஞ்சில உ ,, சீரகம உ ,,
சாதிப்பத்திரி உ ,, சாதிக்காய உ ,,
நருபலாறி உ ,, சோம்பு உ ,,
வாய்விளங்கு உ ,,

ஆவினபாலாலாட்டி எண்ணெயிறகலந்துகாய்ச்சி வடிதது மூழுகிவர அந்தி மாலை நேத்திரநோய் கூசு-பித்தவெட்டை பித்தவாய்வு அஸ்திவெட்டை உடம பெரிவு கைகால்காந்தல் உஷணரோய்தீரும இச்சாபத்தியம்,

---

குழந்தைகட்குபேதி.

சுக்குள்ளி இண்டங்கொழுந்து கடுக்காத்தோல் இவைகளை சிதைத்து எண்ணெயிற்போட்டெறிதது பின் குழந்தைகட்கு ஒருசங்குகொடுக்க நன்றாய்பேதியாகும் கிருமிகள்விழும,

---

நாக்குபபூச்சிகளவிழ

ஓமம் புரசைவித்து வேப்பீர்க்கு பிரண்டை இவைகளை சமயிடைகொண்டு வெள்ளாட்டுநீரில அராழுஞ்செய்து வடிகட்டி ஒருபாலடைகொடுக்க கிருமிகள பந்துபந்தாய்விழும்

---

பெரியோர்களுக்குமலக்கட்டு நீங்கசூரணம்,

கருவேப்பிலையும் வல்லாரியிலையும் சமமாயெடுத்து தேனில்குழைத்து இரவில போசனஞ்செய்தபிகு சாப்பிட்டுவரவும் காலையில மலம் தாராளமாயுமாதயும் நாளுக்குநாள வாய்வுநீங்கும்,

## பிள்ளைகள் வாய்வு உப்பிசம மலக்கட்டு இவைகட்கு பூபதிமாத்திரை

இரசம் க விராகனிடை சுக்கு க விராகனிடை
வெண்காரம் க-விராகனிடை கெந்தகம் க-விராகனி
நேர்வாளம் ௪-விராகனிடை

இவைகளை சுத்திசெய்து குளிர்ந்தநீர்விட்டு அரைத்து பாசிப்பருப்பளவாய மாத்திரைசெய்து ஒருமாத்திரையெடுத்து வெந்நீரிலுரைத்துகொடுக்க ஊது மாந்தம் பொருமல் வாதம் இவைகள் நீங்கும் பத்திய மில்லை.

### அமிர்தசஞ்சீவிக்குழம்பு,

சாதிலிங்கம் க விராகனிடை வெண்காரம் க விராகனி
ஆமணக்கன்பருப்பு உ வாளம் ௪ விராகனி

இவைகளை சுதநித்து அரைத்து குன்றிப்பிரமாணம் குளுந்த தண்ணீரில்கொடுக்க பேதியாகும் வெந்நீர் கொடுக்க பேதிகட்டும்,

### இதுவும் பிள்ளைகட்கு செண்பகமாத்திரை,

செண்பகப்பூ க விராகனிடை ஏலம் க விராகனிடை
லவங்கம் க விராகனிடை திப்பிலி க விராகனிடை
சுத்தித்தவாளம் ரு விராகனிடை,

வெந்நீர்விட்டரைத்து கால்கழஞ்சுயிடை மாத்திரைசெய்து தேனிலாவது சுக்குகியாழத்திலாவதுகொடுக்கபேதியாகும்,

### சாம்பல் மண்தின்னுகிர குழந்தைகட்குமருந்து,

கீழாநெல்லிவேர் க விராகனிடை கடுக்காதோல் உ வி
மிளகு ௩ விராகனிடை

புளித்தமோரில் அரைத்துகலக்கி சங்களவு மூன்றுநாள்கொடுக்கதீரும் இரும்ப மண்முதலானவை தின்னாது,

கக்குவானுக்கு வேறுமருந்து;

மயிலிறகு சாம்பலும் மிளகுசாம்பலும சமனாய்ச் சேர்த்துப்பொடித்து ஆவின்நெய்யில் மதநித்து கழற்சிக்காயளவு கொடுக்கத்தீரும்,

குழந்தைகளுக்கு விரைவாதமகண்டாலமருந்து

ஒருகோழிமுட்டை வெள்ளைக்கருவில ஒருகெச்சக்காயபருப்பு உடைத்துப்போட்டு ஒருவிராகனிடை சித்தாமுட்டிவேரையும அரைத்துப்போட்டு மூன்று நாள்பொருத்து கொடுக்கத்தீரும்,

இதுவுமது விரைவாதமெண்ணை.

சுக்கு எலுமிச்சங்காயளவு திப்பிலி எலுமிச்சங்காய
மிளகு எலுமிச்சங்காயளவு சமபு ,,
ஓமம் வெள்ளுள்ளி ,,
செச்சக்காய்ப வேப்பங்கொழுந்து

இதுகளெல்லா மரைத்து ஒருபடி விளக்கெண்ணெயிலபோட்டு கரைத்து மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து சிறுகரண்டிவீதம் காலையிலகொடுத்துவரநீங்கும் ௩-எ-கக-நாள் கொடுக்கவும் வாய்வுபண்டங்கள் நீக்கி போசனமபிக்கவும்,

பிள்ளைகள் பல்லில் இரத்தம்வடிதலுக்கு

மருந்து;

பச்சை நன்னாரிவேரைகொண்டுவந்து வெந்நீர்விட்டரைத்து கொட்டைப்பாக்களவு கொடுக்கவும், க-நாளைக்கு மூன்றுவிசையாக காலை உச்சி மாலை இப்படி நித்திறவரையில கொடுக்கவும்,

பிள்ளைகள் காதில் யீபுகுந்தால் மருந்து

குப்பைமேனியிலையில சிறுநீர்விட்டு சாறுபிழிந்து காதில்பிழிய யீசெத்து வெளியில்விழும்,

, சகலகாச்சலுக்கும் பச்சைகற்பூராதித்தைலம்,
பச்சைகற்பூரம் உ விராகனி லவங்கப்பட்டை உ வி ஜாதிக்காய் உ விராகனி வாலுளம ௪ வி குமரிச்சாற்றிலரைத்து உளுந்து பிரமாணம் மாத்தி ரைசெய்து சக்கரையில் ஒரு குளிகையிட ஒன்றேமு க்கால நாழிகையில் விரோசனமாகி காச்சல்தீருகும்,

## சணைச்சூடுதணிய எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய் அரைபடி வல்லாரைச்சாறு அ படி வெந்தயம்

ஆவின்பாலிலரைத்து கலக்கி பதமாய்க்காய்ச்சி வடித்து சக்கரைகலந்து கரண்டிவிதம்கொடுக்கவும் சணைச்சூடுதணியும்,

## சதைபடைப்புக்கு மருந்து

முற்றின கோழியின் குடலிலிருக்கும் சிறுகல்லும் வெள்ளரிப்பிஞ்சும் பூறு கரும்பெல்லும் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்தரைத்து ஆவின்பாலில் கலக்கிக்கொடுக்கத்தீரும் இப்படி ஆறுநாள் கொடுக்கவும்,

## பிள்ளைகள் சகலகழிச்சலுக்கும் உருண்டை

சாதிக்காய் சாபத்திரி லவங்கம்
ஏலம் அதிமதுரம் அதிவிடையம்
அபின் கஞ்சா கோரோசனை கோரைக்கிழங்கு
வெந்தயம் சீரகம் சிறுநாகப்பூ புளியாரை
காட்டாத்திப்பூ மாதளம்பிஞ்சு வாழைப்பூ

இவையெல்லாமிடித்து ஆவின்பாலில் பிட்டவியல் அவித்தெடுத்து வாழைப்பூச்சாற்றிலாவது மாதளம்பழச்சாற்றிலாவது அரைத்து மிளகுபோலுருண்டை

செய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு ஒரு மாத்திரையை பொடித்து சக்கரையிலகலந்துகொடுக்கவும் இப்படி அந்திசந்திகொடுக்கநீங்கும்,

பிள்ளைகள் மலககட்டுக்கு விரோசனப்பொடி,

இலைக்கள்ளிவேர்பட்டை ரு பலம் மிளகு கவ பலம்
உள்ளி ,, கவ பலம் கடுக்காய் கவபலம்

இவைகளை இரவில் காயவைத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைக்குக்கொண்டு குழந்தைகளபெலமறிந்து மூலைப்பாலிலல்லது வெந்நீரில ஒரு காசெடைபோட்டு குலிககிவார்கக விரோசனமாகும

கண்புகைச்சல் காதுமந்தம் மண்டைகுடைச்சல்

இவைக்குதைலம்,

வெட்டிவேர்தூள் ய பலம் சு-படிஜலத்தில்போட்டு கியாழமிட்டு அரைப்படியாய்க்காய்ச்சியிரக்கிநல்லெண்ணெய் முக்கால்படி கூடவிட்டு அதிமதுரம்தேசாவாம் கடுக்காய் கஸ்தூரிவஞ்சள் வகைககு அரைபலம் இவைகளைப்பொடித்துப்போட்டு காய்ச்சிமுழுகிவர பீனிசம் மண்டைகுடைச்சல் நீர்கோவை கண்புகைச்சல் காதுமந்தம் தேகயெரிவு காந்தல் இவை தீரும் இச்சாபத்தியம்,

சகலசுரத்திற்குமாத்திரை

ஆடுதின்னாப்பாளைவேரை நிழலிலுலர்த்தி கருவாய்ப்பட்டை சமன்கூட்டி பொடித்து வஸ்திரகாயஞ்செய்து எலுமிச்சம்பழ ரசத்தாலாட்டி பசித்துக்கொட்டைபிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சிசுரசம்தேன் இதுகளில் கொடுக்கநீங்கும்,

கணம் இருமல் வாய்நாற்றத்திற்கு கியாழம்,

மணத்தக்காளி ஒருபிடி வெந்தியம்ஒருபலம் ஈருள்ளி மூன்று பலம் துடடிடை இவை பொன்னிறமாய்வருத்து ஒருபடி தண்ணீர்விட்டுக்காய்ச்சி எட்டொன்றாய்க்காச்சிவடித்து மூன்றுவேளை கொடுக்கத்தீரும்

மண்டைபிணிசுக்குப்புகை

லிங்கம் விராகனிடை க அத்திப்பட்டை பலம் வ இவைரெண்டையும் நிழலுலர்த்தாக உலர்த்திப்பொடிசெய்துவைத்துக்கொண்டு சுங்கானில் கொஞ்சம் போட்டு புளியன்பட்டையை கொளுத்தி அந்த நெருப்பை சுங்கானில்போட்டுபிடிக்கவும் இம்முறையாக ஐந்துநாள் பிடிக்க மண்டை பிணிசுதீரும்

கல்லடைப்பு மருந்து,

| | | | |
|---|---|---|---|
| மூள்ளிலவம் | க பலம் | நாவல்கொழுந்து | க பலம் |
| பூலா | க பலம் | வெட்பூலா | க பலம் |
| முத்தக்காசு | க பலம் | நன்னாரி | க ,, |
| மூல்லை | க பலம் | சீந்தில | க பலம் |
| செந்தாமரை | க பலம் | சித்தாமுட்டி | க பலம் |
| செங்கழுநீர் | க பலம் | சிறுபீளை | க பலம் |
| விராலி | க பலம் | வெட்டிவேர் | க பலம் |
| விலாமிச்சம்வேர் | க பலம் | பொன்னாங்கணி | க பலம் |

நாலுபடி இளநீரில் போட்டு அரைபடி கியாழமாய் வற்றக்காய்ச்சி வடிகட்டி கொடுக்கத்தீரும்,

சகலமேகயெண்ணெய்.

சித்தாமணக்கன்முத்தை ஒருநாள் யிளநீரில் ஊரவைத்து மறுநாள் அரிசி கழுவியதண்ணீரில்வேகவைத்து உலர்த்தி ஆவாரைவேர் கியாழத்திலகரை

த்துக் காயச்சி பிழிந்த பெயணையும் பெரும்பூசினிக் காய்சாறு தென்னம்பூசாறு வகைக்கு படி-க நன்றா ர்வோ ஜாதூபலம் பெடித்தடித்து காலுபடி தண்ணி யிறபோட்டு கியாழமிட்டு அரைப்படி கியாழமாக யி ரக்கி மேற்படி மருந்துடனகலந்து காய்சசிவடித்து சுட்டின ரசகற்பூரம் விராகனிடை அ கோரோசனை விராகனிடை-உ இரண்டும் கலவத்திலிட்டு மேற்படி யெண்ணெய்விடாதது உ-சாமம் அரைத்து கரைத்து கலசத்திலவைத்துக்கொண்டு தேகபலமறிந்து கால் அல லது அரைவிசம்படி கொடுக்கவும் உப்பு புளிநீக்கிபத் தியம்வைக்கவும் மேகசூலை வெட்டை அஸ்திசூடுபிர மேசம் மேகச்சொரிசிரங்கு முதலானதும்தீரும்,

## சகலமேகத்திற்கும் யெணணெய்

விளக்கெண்ணெ அரைபடி பெரும்பூசினிக்காய்ச் சாறு-க-படி ராவெங்காயச்சாறு அரைபடி எலுமிச் சம்பழச்சாறு அரைபடி தாமரைச்சாறு அரைபடி ஜீரகம் பூண்டு கலந்துகொண்டு வெந்தியம் க-பலம் அரை த்து அதிலகலக்கு மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கு கரண்டிவிதம் சாப்பிட்டுவர சக லமேகமும் சூடுவெட்டை பிரமேகம் மூலக்கள அறுகாது நெடுநாளை நீர்கட்டு அக்கினிமந்தம்இவை தீரும்,

## மேகவாய்வுக்கு வெள்ளிபஸ்பம்

சொக்கவெள்ளியாவது ரூபாவெள்ளியாவது க ழஞ்சுருபாயிடை யெடுத்து யிதை வாழைமரத்தடியின் சொரிகிவைத்து கடு-நாள்பொருத்துபோய் பார்த் தால சொரிகிவைத்த வெள்ளியின்மேல் முட்டைமு ட்டையாக கிளம்பியிருக்கும் அதைகொண்டுவந்து குப்பைமேனிசார்விட்டு அரைத்து பில்லைதட்டி செ

ப்பயலில்வைத்துகாய்ந்தபிறகுமண் அகலேரெண்டுகொ ணடுவந்து ஒரு அகலிலயில்லேயைவைத்து மேலஒரு அகலேமூடி சீலேயில்மண்பூசி கவசம்செயது ம-கைவ ரட்டியில்புடம்போடவும் சுன்னமாகும் அதை கல்வ ததிலிட்டு அரைததுவைத்துக்கொளளவும்

உள்ளுக்குசாப்பிடுமுறை

வேளையொன்றுக்கு அரிசியிடை பசுப்வெண ணெயில குழைத்து காலே மாலே ரு-நாள்சாப்பிடவும

சீருமவியாதிகள்,

அரையாப்பு கொருக்கு கைகால்பிடிப்புடன் உக மேகமூநதீரும் பத்தியம இச்சாபத்தியம்

எ-நாள வேமலநானம் சு-நாள் என்னெணய்ஸ்தா னமசெய்யவேண்டும்,

ஊஷ்டபேதிக்குகரியுப்பு,

கரியுப்பு கவ பலம் துத்திவோபட்டை எ-பலம் அதின்சமூலம் கூ பலம்

இவைகளைக்கொண்டுவந்து வேர்பட்டையும் இ லேயும் வெவ்வேருக வுரலிலிட்டுயிடித்து பிரகு வெ ளாங்காய்பிரமாணம் மண்குடுவைகொண்டுவந்துயிடி தவேரையும் யிலேயையும்ஐநதுபாகமாக்கிஒருபாகம வேரில் பாதிகுடுவையில்போட்டு பிரகு உப்பை மத தியில்வைத்து அதின்மேலமற்றபாதிவேரையும்போ ட்டு அதின்மேல யிலேயையும்போட்டு குடுவைமேல ஒரு ஓட்டுபிலலேமூடி சீலேயில மண்கவசம்செய்து கோழிப்புடமபோடவும இப்படிஐநதுபுடமபோட்டு யெடுத்து கல்வத்திலிட்டு அரைததுபுட்டியில் போ ட்டுவைத்துக்கொள்ளவும,

சாப்பிடுகிறதற்கு ஒருவிராாணிடையெடுத்து அப் பட்டமானதேனில் குழைதது காலே மாலே ஐந்துநா ள்சாப்பிடவும்.

தீரும்வியாதி மேகவாய்வு ஊஷணவாய்வு கை கால்பிடிப்பு அஜீரணம்பித்தம்இவைமுதலான தும்தீரும்.

பத்தியம் நல்லெண்ணெய் கடுகு கொள்ளுபருப்பு அவத்திக்கீரை பூசினிக்கா லாகிரி யிதுகள்கூடாவாம் பெரியோர்களுக்கு காணும் சகலமேகவெள்ளைக்கும்

## லேகியம்.

கால்படி தேற்றான்வித்து கொண்டுவந்து நன்ரு யுறைக்துக்கழுவி பசும்பாலில் ௩-நாள் ஊரப்போட்டு யெடுத்தரைத்து அந்தணிறைக்கி சரியிடை பசுமவெண்ணைகூட்டி பிசைந்து ஆவின்நெய் அடுப்பிலேற்றி மேற்படி மருந்தைபோட்டு கிண்டிக்கொண்டேயிருக்கவும பொன்னிறமாய்வருமபொழுது சீரகம ஏலம வகைக்கு இரண்டரைவிராகனிடை

| | | |
|---|---|---|
| சாதிக்காய் | சிறுநாகப்பூ | லவங்கப்பட்டை |
| ஜாபத்திரி | தாளிசபத்திரி சதகுப்பி | குங்குமப்பூ |
| அதிமதுரம் | திருகடுகு | கிராம்பு கருஞ்சீரகம் |

வகைக்கு விராகனிடை-௫ யாவும் யிடித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் மூன்றுபலம் சீனியும் கலந்துகொண்டு அடுப்பிலிருக்கும் லேகியத்தில் சிறுக சிறுக தூவிக்கொண்டே கிளரிவருகையில் படிகாரத்தை பொரிகவைத்து பூர்த்தெடுத்த சுண்ணம் ௧-பலம்தூவி கிளரி யிரக்கிவைத்துக்கொண்டு நிதம் இருவேளையாக கொட்டைப்பாக்களவு கொடுத்துவரவும் ௨௰-நாள்கொள்ளவும் இச்சாபத்தியமா யிருக்கவும் நெய்-பால்-தயிர் சேர்ககலாம் சூடானபதார்த்தங்கள் யாவும் நீக்கி குளிர்ச்சியான மணக்கரி மாமிசமுதலானதும் ஆகும இம்மருந்து முடிவான ௧௫-நாள்மட்டும் ஸ்திரீபோகம்நீக்கவும் எவ்விதவெள்ளையும்தீரும்

## வெள்ளைக்கு வெள்ளீயபஸ்பம்,

தங்காடியிலைகொண்டுவந்து அரைத்து வெள்ளீயம் பலம்-க நிறுத்து அரைத்தயிலையுள்வைத்து சீலை கவசஞ்செய்து ங-வரட்டியால புடம்போடவும் சுண்ணமாகும்.

## உள்ளருக்குச்சாப்பிடுமுறை,

வேளையொன்றுக்கு கடலைப்பிரமாணம் ஏழுநாள் காலைமாலைவெண்ணெயிற்குழைத்துச்சாப்பிடவும்

## தீரும்வியாதிகள்

சகலவெள்ளையுந்தீரும் இச்சாபத்தியம் கூ-நாள் ஓமஸ்தானஞ்செய்யவும் கக-நாள் எள்ளெண்ணெயில் ஸ்தானஞ்செய்யவும்.

## மன்மதசிந்தாமணிலேகியம்

பசும்நெய் அரைபடி சீனிசர்க்கரை ம-பலம்போட்டு அடுப்பேத்தி கரைத்து பாகுபதமானதில்

| | | | |
|---|---|---|---|
| திரிகடுகு | க பலம் | ஏலம் | க பலம் |
| எள்ளு | க | ,, சிரம்பு | க |
| உளுந்து | க | கோஷ்டம் | க ,, |
| வெந்தயம் | க | இலவம்பிசின் | க |
| இலைவித்து | க | குராசாணிவோம | க |
| மல்லி | க | மதுரம் | க |
| கச்சோலம் | க | ஜாதிக்காய் | க |
| இந்துப்பு | க | சிறுதேக்கு | க |
| கடுககாப்பூ | க | நற்சீரகம் | க |
| கருஞ்சீரகம் | க | ஓமம் | க |
| லவங்கப்பட்டை | க | லவங்கபத்திரி | க |
| மதனப்பூ | க | மூந்திரிப்பழம் | க |
| வசம்பு | க | கடுக்காய் | க |
| நெல்லிவற்றல் | க | தான்றிக்காய் | க |
| இலுப்பைப்பூ | க | செங்கழுநீர்ப்பூ | க |

| | | | |
|---|---|---|---|
| அமுக்கிறாக்கிழங்கு | க | சீந்திற்றண்டு | க |
| நெஞ்சிலபழுப்பு | க | நிலப்பனைக்கிழங்கு | க |
| நீர்முள்ளிவிரை | க | வாழை | க |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | க | ஆவாரை | க |
| சந்திச்சாரனை | க | சிறுகாஞ்சொறி | க |
| அபின் பிரரகனிடை | க | | |

இவை ரவிவிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து பசும்பாலில் பிட்டிட்டு உலர்த்திய சூரணத்தை மேற்படி நெய்பாகில தூவிகொண்டேலரவங்கடைசியில தேன் ம-பலம்பெய்துகொஞ்சமாயவிட்டு மெலகியபதமாகுமட்டும் இளரிபிரக்கிளைவந்துக்கொண்டு வேளையொன்றுக்குகொட்டைப்பாக்குபிரமாணமாக இருவேளையுமசாப்பிடவும்பத்தியம பாலுஞ்சாதமகொள்ளவும் தேகம்பலப்பதுடன் தாதுவிர்த்தியுண்டாம் உ ம-அலலது ச ய-நாள் நின்றால்மிகநலலது.

மதனசஞ்சீவிநெய்

| | | | |
|---|---|---|---|
| திருகடுகு | ச | களஞ்சி சிறுநாகப்பூ | ச களஞ்சி |
| கிராம்பு | ச | களஞ்சி பத்திரி | ச |
| வாலமிளகு | ச | சிரகம | ச |
| தக்கோலம் | ச | | |
| மிகோரக்கர்மூலி | ரு | அபினி | ரு |

இவைகளை ஆவின்பாலி லரைத்து மூக்கர்ல்படி நெய்யிலவேகவைத்து நெய்யைவடிகட்டிக்கொண்டு ஒருகரண்டிநெய்சாப்பிடவும் புளியைத்தள்ளி பாலுசாதம்சாப்பிட்டுபுணர்ந்தால் இந்திரியம்கலிதமாகாது மிகவும் இன்பங்கொடுக்கும்,

பரமசிவன்பார்வதிக்குபதேசித்த

வயித்திய அரிச்சுவடி

சம்பூரணம்.

௨

கடவுள்துணை.

# அட்டவணை.

---


பக்கம் வயித்தியநாடிமுறை.

க முகவுரை
சு ஜீவவுற்பத்தியறியும்விபரம்
எ நாடியின்குறி
அ நாடியின்மாதக்குறிப்பு
ய நாடிநிலையறியவும
கசு நாடிஙனிற்கும்நிலை
கஎ வாதபித்தமசிலேற்பனமசெய்குறி
பித்தம்செய்குறி
கஅ சிலேற்பனமசெய்குறி
யிதுவும்வேறு
உய மரணக்குறி

அவிழ்தமுறை

ஙச பித்தத்திற்குகியாழமபித்தசுரத்திற்குகியாழம்
ஙரு பித்தசுரவாதசுரத்திற்குகியாழம்
[illegible]
ஙகூ கெற்பகுடுதணியகியாழம் சீதபேதிக்கு ஙடமு
ஙஎ வாதசுரத்துககுகியாழம
பித்தசுரத்திற்குகியாழம
சிலேத்துமசுரத்திற்குகியாழம
ஙஅ நீரடைப்புக்குகியாழமம நுமுறை
ஷிணாவாதத்திற்குகியாழம
ஙசு ஷிணாவாதத்திற்குமசாலவடை
வயற்றுநோய்க்கும வயற்றுகிருமிகடகுகியாழ
சய அண்டவாதசாந்திபொடிரெத்தபித்தந்தீருடிநீர்
உட்காச்சல்பிரமியமேகத்திற்குசாந்தி

சக இருமல்உப்பிஷகதிரபொடி
ஈளை யிருமல்சுவாசத்திற்குகிருதம்
சஉ பிள்ளைகட்குசுரத்திற்கும்குளிருக்குமருந்து
அசீரணத்திற்குகுழிப்புரணங்களுக்குமொலாம்
தநதவியாதிக்குப்பொடி
சரு மகோதரசர்க்கிக்குசாறு ஷீரநெய்
கிரந்திகுலைபுண்வயற்றுவலிவாய்வுபெரும்பாடுக
சச நீர்கடுச்சலுக்குகட்டிவாதி காதிரைச்சலுக்கு
பெரும்பாட்டுக்கு (தைலம்
சரு ஒடுகுன்மத்திற்குபொடிநீர்கடுப்பிற்குமருந்து
பிள்ளைபெற்றவர்களுக் வயற்றில்தங்கியஅழுக்
குநங்குமுளைகரப்பான்ரணங்களுக்குஎண்ணை
சசு வாய்வுகிரந்திதீரநத்தையெண்ணை
கரப்பான்ரணத்திற்கும்உள்ளுக்குமேலுக்கும்எ
பேதிக்கு எண்ணை குளிர்சியெண்ணை

சஅ ராட்சதசூரணம்
வாதத்திலுல்வந்தகுத்தல்குடைச்சல்தீரசூரண
ஞகூ சொரிசிரங்கிற்கும்குலைக்கும்எண்ணை
அரையாப்புதீர எண்ணை பெருமூத்திரந்தீரபசு
மோர் பலவலிதீரக்கியாழம்
ரு0 பித்தம் சயி தீரதலைமுழுகும்தைலம்
பித்தத்திற்குசூரணம்மூலநோய்யாவுந்தீரசூரண
ருக கண்டததிற்குமேற்பட்டவியாதிக்கெல்லாம்சூ
வாதம் அய-சூரணம் ரணம்
கவிசைபெருவயறுதீர பேய்துமட்டியெண்ணை
ருஉ பிரத்தமேகந்தீரதாளிசசூரணம்
கண்ணோய் கூசு-க்குந் தலைமுழுகும்தைம்
ருரு கண்டமாலைக்கு மேற்பூசுந்தைலம்
சிலவிஷங்கட்குகுடிநீர்கணத்தெண்ணை
ருச கணத்திற்குசூரியபுடஎண்ணை கைகாலில்பித்

வெடிகண்டால்மருந்து நீரில்ரெத்தமகண்டால்
மருந்து முழங்கால்வாததிற்குகட்டடம்
௫௫ சளிகோழைக்குபிரண்டைரசம்
பிள்ளைபெற்றவர்களுக்கு சீழ்நீரம்கட்டினால்ம
ருந்து சுகஜன்னிக்குநெய்
சூட்டினால்கண்டவெள்ளைக்குமருந்து
சிறுநீர்பிரங்கமருந்து
௫௬ மேகபுண்புரைகள் முதலானரணங்களுக்கு த
டிச்சலதளும்புதாமரைகட்குபூசுமருந்து
தலைவலிகளுக்குசுருக்குதைலம்
நாக்கிலும் உதட்டிலுமுண்டாகும் புண்களுக்கு
குளிர்ச்சியெண்ணெ
௫௭ மேகம் சகலபிணிசம்மேககாங்கைக்குதைலம்
பிணிசத்தைலம் பித்தவெட்டைஅஸ்திசுரம்கை
கால்காந்தல் யிவைகட்குபசும்பால்தைலம்
௫௮ குழந்தைகட்கு பேதி நாக்குபூச்சிகள்விழ
பெரியோர்களுக்கு மலக்கட்டுநீங்க சூரணம
௫௯ பிள்ளைகட்கு வாய்வு உப்பிஷம் மலக்கட்டுக்கு
பூபதிமாத்திரை அமிர்தசஞ்சீவிகுழம்பு
பிள்ளைகளுக்குசெண்பகமாத்திரை
சாப்பல்மண்தின்னுகிரகுழந்தைகட்கு மருந்து
௬௰ கக்குவானுக்குமருந்துகுழந்தைகட்குவிளாவா
தம்கண்டால்மருந்துவிரைவாதத்திற்குஎண்ணெ
பிள்ளைகள்பல்லில்ரத்தம்வடிதலுக்குமருந்து
பிள்ளைகள் காதில் சீழ்வந்தால்மருந்து
௬௧ சகலகாச்சலுக்கும் கற்பூரமாத்திரை
கணைக்குதேணியயெண்ணெ சதையடைப்புக்கு
மருந்துபிள்ளைகள் சகலகழிச்சலுக்கு உண்டை
௬௨ பிள்ளைகள் மலக்கட்டுக்குவிரேசனப்பொடி
கண்புகைச்சல்காதுமந்தம்மண்டைகுடைச்சல்
யிவைகட்கு தயிலம் சகலசுரத்திற்குமாத்திரை

௬௧ சணம் இருடல் வாயநாற்றத்திற்குகியாபூப
மண்டைபீனிசுக்குப்புகைகலவைப்புக்குமரு

௬௨ சகலமேகயெண்ணெய்


௬௪ சகலமேகத்திற்கும் எண்ணெய்
மேகவாய்வுக்கு வெள்ளியபஸ்பம்

௬௫ உஷ்ணபேதிக்கு கரியுப்பு

௬௬ பெரியோர்களுக்குகாணும் சகலமேகவெள்ளை
சுகும்லேகியம்

௬௭ வெள்ளைக்கு வெள்ளிபஸ்யம்
மணயதம்பிநதாணிலேகியம்

௬௮ மதனசஞ்சீவிரோய



பல்கலைக் கழக
7 FEB 198

இதைச்சேர்ந்த உ-வது புத்தகமாகிய வயித்திய வரிக்குவாய்பாடத்தில கைமுறையாய் செய்யத்தகுந்த பஸ்பம் செந்தூரம் கிருதம் முதலான அவிழ்தங்களும் சில சரக்கு சுத்தியாகங்களும் சீக்கிரத்தில் வெளிவரும்.